தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர். இருளினின்று... ஒளிக்கு அழைக்கப்பட்ட மக்கள்

(1 பேதுரு 2: 4-9)





தயாரித்தவர்கள்:
கோலாலம்பூர் மாமறைமாவட்ட குடும்ப வாழ்வுப் பணிக்குழு

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்: apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 19/2023


குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் காயங்கள் மற்றும் சவால்களால் குடும்ப வாழ்க்கை இன்று துண்டு துண்டாக பிளவுபட்டுள்ளது. இந்த நிதர்சனமான உண்மை குடும்பங்களில் பெரும் துன்பத்தைத் தருகிறது.

ஈஸ்டர் மக்களாக இருந்தாலும், உடன்பிறந்தோர், பெற்றோர் மற்றும் குழந்தைகளிடையே, மன்னிப்பு என்பது பெரும்பாலும் புறக்கணிக்கப்படும் ஒன்றாக இருக்கிறது. இந்தப் போக்கைத் தொடர்ந்து அனுமதித்தால், காயங்கள் ஆழமாகத் தான் போகும். இதற்கென எதுவும் செய்யாமல் இருந்தால், பாதிக்கப்பட்ட நபர்கள் பிரிந்து செல்வார்கள். இதன் விளைவாக ஒற்றுமையின்மை மற்றும் குடும்ப வாழ்க்கையில் முறிவுகள் ஏற்படும். முன்பு அன்பு இருந்த இடத்தில், அந்நியத்தன்மையும், கோபம், மற்றும் வாழ்க்கையும் திசைமாறியும் போய்விடும்.

குடும்பங்களில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அவற்றில் ஒன்று நிபந்தனையற்ற அன்பு. குற்றங்களும் காயங்களும் எவ்வளவு ஆழமானதாக இருந்தாலும் அல்லது புண்படுத்தக்கூடியதாக இருந்தாலும், கடவுள் நம்மை ஒரு குடும்ப அமைப்பாக, ஒரு குட்டி திருஅவையாக இணைத்துள்ளார் என்பதை நாம் உணர்வது அவசியம். மன்னிப்பு என்பது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட வகையில் தொடங்கப்பட வேண்டும். உண்மையான இதயத்துடனும், உண்மையான வருத்தத்துடனும், நாம் மன்னிக்கவும், மன்னிப்புக் கேட்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் குறைவுள்ளவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாமும் தவறுகள் செய்பவர்கள் தான். மேலும் நாம் அனைவரும் மகிழ்ச்சியான, அன்பான குடும்பமாக வளரவேண்டும் என்று விரும்புகிறோம். இது நிறைவேறவேண்டுமென்றால் மன்னிப்பை செயல்படுத்தினால் தான் இது சாத்தியமாகும்.

பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறின் இரண்டாம் வாசகத்தில் (1 பேதுரு 2:4-9) நாம் தேர்ந்தெடுக்கப்பட் வழிமரபினர், அரச, குருக்களின் கூட்டத்தினர். இருளினின்று நம்மை ஒளிக்கு அழைக்கப்பட்ட மக்கள் என்று பேதுரு நினைவுறுத்துகிறார். 10 ஆவது உலக குடும்பங்களின் கூட்டம் உரோமையில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்றபோது கூறப்பட்ட செய்தியின் சாரம்: “நாம் குழந்தைகள், நாம் சகோதர சகோதரிகள். இதை நாம் வாழ்ந்து காட்டவேண்டும் என்பதை நினைவூட்டுகிறது”

குடும்பமாக மன்னிக்கப் பழகுங்கள். ஒவ்வொருநாளும் ஒருவர் மற்றவரை மன்னிக்கவும், மன்னிப்புக் கேட்கவும் இதற்கென நேரம் ஒதுக்குங்கள். மன்னிப்பு இறைவேண்டல் செய்யுங்கள். ஒருவரை ஒருவர் ஆசீர்வதிக்கவும், இயேசுவின் அமைதியை பரிமாறிக்கொண்டும், உயிர்த்த இயேசுவின் வல்லமையை அனுபவியுங்கள். ✣


# Newbec

6 & 7 மே 2023

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு


**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: குடும்ப வாழ்வு

நிகழ்வின் நோக்கம்: அனைத்துலக குடும்பங்கள் தினம்

## குடும்ப வாழ்வும் மன்னிப்பும்

குடும்ப வாழ்க்கையில் மன்னிப்பு தான் முதன்மையாக நிலைத்து நிற்கவேண்டிய மதிப்பீடு. மன்னிப்பைப் பற்றி இயேசு இவ்வாறு கூறுகிறார். “ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்” (மத்தேயு 18:22) மீண்டும் யோவான் 8:1-11 இல் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்னை இயேசு மன்னிப்பதைப் பார்க்கின்றோம்.

